# மறந்த நாள்



திக்குவல்லை கமால்

# பிறந்த நாள்

சிறுவர் இலக்கியம்



திக்குவல்லை கமால்

ஃபரீதா பிரசுரம் - இரண்டு (02)
முதற் பதிப்பு - 2003 டிசம்பர்
உரிமை பதிவு

**இந்நூல்**

இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் அச்சிடப்பட்டது. இதன் உள்ளடக்கக் கருத்துக்கள் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை என்பதுடன் இது கையெழுத்துப் பிரதி நிலையில் சபையால் திருத்தம் செய்யப்பட்டது என்பதைக் கவனித்துக் கொள்ளவும்.

தலைப்பு : பிறந்த நாள் (சிறுவர் இலக்கியம்)
ஆசிரியர் : திக்குவல்லை கமால்
ஓவியம் : கலைவாதி கலீல்
பக்கங்கள் : 36 + IV
எழுத்து : 16 புள்ளி
பதிப்பு : ஃபரீதா பதிப்பகம்
104, கஸ்ஸாலி மாவத்த
அட்டுலுகம,
பண்டாரகம
தொலைபேசி : 038-2292118
அச்சு : கியூஜீ பிரிண்டர்ஸ்
103, தெமடகொட வீதி,
கொழும்பு 09. ☎: 011-4611079
விலை : எண்பது ரூபா (80/=)
**ISBN 955-95926-6-1**

**அன்பான தம்பி, தங்கையர்களே !**

*உங்களை எல்லாம் இந்தப் புத்தகத்தின் மூலம் சந்திப்பதில் மிக்கவும் மகிழ்ச்சி.*

*எங்களுடைய எதிர்காலம் நீங்கள். உங்களுடைய எதிர்காலம் கல்வி. இதை விளங்கிக் கொண்டு நன்றாகப் படிக்கின்றீர்கள் அல்லவா?*

*கல்வி பாடசாலையோடு மாத்திரம் எல்லைப்படுத்தப்படவில்லை. அது பரந்த கடல் போன்றது. பல்வேறு ஊடகங்கள் மூலம் நீங்கள் அறிவைத் தேடிக்கொள்ளலாம். எனினும் வாசிப்பதன் வாயிலாக அறிவு விருத்தியடைவதோடு மொழிவளம் பெருகவும் வாய்ப்புக் கிடைக்கிறது.*

*நீங்கள் சிறந்த அறிவாளிகளாக வர வேண்டும். அற்புதமான திறமைகளை வெளிக்காட்ட வேண்டும். உயர்ந்த நடத்தை கொண்டவர்களாகத் திகழ வேண்டும். எதிர்காலத்தில் 'நல்ல மனிதர்கள்' என்று போற்றப்படவேண்டும். இதற்கு வாசிப்பு பெரிதும் துணை செய்கிறது.*

*இந்தச் சிறிய புத்தகம் உங்களது நடவடிக்கைகளில் சில மாற்றங்களையாவது ஏற்படுத்தவேண்டும். அதுவே எனது எதிர்பார்ப்பு.*

அப்போதுதான் இதனை எழுதிவெளியிட்ட பயனை நான் அனுபவிக்க முடியும்.

நீங்கள் வளரவேண்டும். நாங்கள் அதைப்பார்த்து மகிழ வேண்டும். அதற்காக எல்லோரும் வாசிப்போம். மற்றவர்களையும் வாசிக்கச் செய்வோம். அருமையான புத்தகங்களைச் சேகரிப்போம். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நூலகத்தை உருவாக்குவோம்.

நன்றி

அன்புடன்
**திக்குவல்லை கமால்**
104, கஸ்ஸாலி மாவத
அட்டுலுகம,
பண்டாரகம.

# நண்பர்கள்

இரவு நேரம்

இடி இடித்தது. மழை சோவெனப் பெய்தது. காற்று சுழன்று சுழன்று வீசியது.

நிமலனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படி நீண்ட நேரம் மழை பெய்வதை அவன் இதற்கு முன்பு பார்த்ததில்லை.

முற்றமெங்கும் தண்ணீர் நிரம்பி வழிந்தது.

நிமலன் மேல்மாடியில் நின்று எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்தான்.

அவன் தனது நண்பர்களை நினைத்துப் பார்த்தான்.

'பாவம் பாஸ்கரன்' என்று அவன் மனம் சொன்னது. அவர்களுக்கு சாதாரணமான வீடு கூட இல்லை. ஒரு ஓலைக் குடிசையிலேயே வாழ்ந்து வந்தனர்.



இந்தக் காற்றுக்கும் மழைக்கும் அந்த ஓலைக் குடிசை நின்று பிடிக்குமா?

அடுத்த நாள் விடியும்வரை நிமலனுக்கு பொறுமையில்லை.

கண்விழிக்கும்போதே மழையின் ஞாபகம் வந்துவிட்டது. நல்லவேளை மழை தணிந்திருந்தது. ஊரெங்கும் கடும்மழையின் அடையாளங்கள் தெரிந்தன.

பாடசாலைக்கு பிள்ளைகள் போக ஆரம்பித்தார்கள். அவனுக்கு வேடிக்கை பார்க்கும் எண்ணமே மேலோங்கியது.

அன்று அதிகமான மாணவர்கள் பாடசாலைக்கு வரவில்லை. பாடசாலை கட்டிடங்களுக்கு அதிக பாதிப்பில்லை. மரங்கள் சில விழுந்திருந்தன. மைதானத்தில் குப்பை கூழங்கள் சேர்ந்திருந்தன. இடையிடையே நீர் தேங்கி நின்றது.

நிமலனின் வகுப்பு நண்பர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தனர். பாஸ்கரனை மாத்திரம் காணவில்லை.

"பாஸ்கரனின் குடிசை வெள்ளத்தில் மூழ்கிப்போயிருக்கிறது. பக்கத்து கோயிலில்தான் தங்கியிருக்கிறார்கள். போதாக் குறைக்கு பலாமரத்துக் கிளையொன்று முறிந்து குடிசைக்கு மேல் விழுந்திருக்கிறது". சத்தியன் தகவல் சொன்னான்.

"பாவம் பள்ளிக்கூடம் விட்டதும் எல்லோரும் போய்ப் பார்ப்போம். நிமலன் வலியுறுத்தினான்."

"போய்ப் பார்த்து என்ன பிரயோசனம்? ஏதாவது உதவி செய்ய வேண்டும்" சத்தியன் ஆலோசனை தெரிவித்தான்.

எல்லோரும் அதற்குத் தயாராகிவிட்டனர்.

தொடர்ந்து மழைபெய்யாவிட்டாலும் வானம் இருண்டிருந்தது.

போதிய மாணவர்கள் வருகை தராததால் நேரகாலத்துடனேயே பாடசாலை மூடப்பட்டது.

நிமலனும் நண்பர்களும் புறப்படத் தயாரானார்கள். முகுந்தன் மாத்திரம் பின் வாங்கிக்கொண்டிருந்தான்.

"என்ன முகுந்தன்?" என்று சந்திரன் கேட்டான்.

"இரண்டுபேரும் நேற்று ஏதோ விடயமாக வாக்குவாதப்பட்டார்கள்". சத்தியன் தெளிவு படுத்தினான்.

"ஆமாம் இன்று வந்ததும் சமாதானப் படுத்தத்தான் பார்த்திருந்தோம்... அதற்குள் இப்படி நடந்துவிட்டது". நிமலன் சொன்னான்.

"பாஸ்கரன் இப்பொழுது கஷ்டத்தில் விழுந்திருக்கிறான். இப்படியான நேரத்தில் கோபம் பாராட்டக்கூடாது". சத்தியன் கனிவோடு எடுத்துக் கூறினான்.

முகுந்தன் அதை ஏற்றுக்கொண்டு புன்னகைத்தான்.

இனியென்ன? எல்லோரும் புறப்பட்டு விட்டார்கள்.

கிராமத்தின் எல்லைப் பக்கமாக வந்து சேர்ந்தனர். அந்தப் பகுதியில் ஓலைக் குடிசைகளே எங்கும் தெரிந்தன.

நிலம் சேறும் சகதியுமாய் காணப்பட்டது. வாழை மரங்களும் கமுகு மரங்களும் சரிந்து கிடந்தன. சில பெரிய மரங்களின் கிளைகள் முறிந்து விழுந்திருந்தன.

சனங்கள் நிவாரண வேலைகளில் மூழ்கியிருந்தனர்.

"அங்கே அதுதான் பாஸ்கரன் வீடு" சத்தியன் சுட்டிக் காட்டினான்.

எல்லோரது கவனமும் அப்பக்கமாகத் திரும்பியது.

முறிந்து விழுந்த மரக்கிளை வெட்டி அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. கூரையும் அகற்றப்பட்டிருந்தது. புதிய கிடுகுகள் ஒரு

பக்கமாக கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தன.

இதற்கிடையில் பாஸ்கரன் நண்பர்களைக் கண்டுவிட்டான். அவனது வாடிய முகத்திலே மகிழ்ச்சி படர்ந்தது.

"அப்பா இவர்களெல்லோரும் என்னுடன் படிக்கிறவர்கள்" என்று நண்பர்களை அறிமுகப்படுத்தினான்.

"எங்களால் இயன்ற உதவியைச் செய்ய வந்திருக்கிறோம்" எல்லோருடைய சார்பிலும் நிமலன் சொன்னான்.

இந்தப் பிஞ்சுகளால் பெரிதாக எதுவும் செய்ய முடியாதென்று அவருக்குத் தெரியும். ஆனாலும் உதவ முன்வந்ததை மதித்தார்.

அப்போதுதான் பாஸ்கரன் முகுந்தனைக் கண்டான். அவன் தயக்கத்தோடு பின்வாங்கிக் கொண்டிருந்தான்.

"முகுந்தன்" என்று ஆவலோடு அழைத்தான் பாஸ்கரன்.

அவன் மகிழ்ச்சி பொங்கச் சிரித்தான்.

இருவரும் அந்தக் கணத்திலேயே எல்லாம் மறந்து விட்டனர்.

ஆவல் ததும்ப இருவரும் கட்டியணைத்துக் கொண்டனர்.

# நமது சூழல்


அது ஒரு ஒதுக்குப்புறம். பெரும்பாலும் ஓலைக் குடிசைகளே காட்சிதந்தன. பெரிதாக இடைவெளியில்லை. இளம் தென்னைகளும் வாழை, கொய்யா மரங்களும் அழகூட்டின.

அந்த நாளைந்து மாணவர்களும் வந்து சேர்ந்து விட்டனர். நான்கு பக்கமும் அவதானித்தார்கள். உண்மையில் அவர்களுடைய சேவை அந்த இடத்துக்கு தேவையாகவே இருந்தது.

"நாங்கள் ஐந்தே ஐந்து பேர்" ஜயந்தன் போதாமையுடன் தயங்கினான்.

"அதுக்கென்ன எங்களால் முடிந்ததைச் செய்வோம் " உற்சாகமாகக் கூறினான் இந்திரன்.

"சரி சரி ஆரம்பிப்போம்" அடுத்த மூவரும் ஒரே குரலில் கூறினர்.



அவர்கள் கொண்டுவந்திருந்த காகித அட்டைகளை சில மரங்களில் கட்டினர்.

'சுற்றாடலைப் பாதுகாப்போம்'.

'பொலிதீன் சூழலை மாசுபடுத்துகிறது'

'நமது சூழல் நமது நண்பன்'

இவ்வாறான வசனங்கள் அவற்றிலே

எழுதப்பட்டிருந்தன.

வேலையை ஆரம்பித்துவிட்டார்கள். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பெரிய பை கிடந்தது. ஆளுக்கொரு திக்காக புறப்பட்டனர்.

பிளாஸ்திக் பாத்திரங்கள், உடைந்த துண்டுகள், பக்கற்றுகள், பொலிதீன் பைகள் இப்படி எதையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. எல்லாவற்றையும் தேடித்தேடிச் சேர்த்து குறிப்பிட்ட ஓர் இடத்தில் கொண்டு வந்து கொட்டினர்.

பொதுமக்கள் படிப்படியாகப் பார்வையாளர் களாக மாறினர். நல்ல காரியம் செய்கிறார்களே என்று வியந்தனர்.

ஒருவர் இளநீர் பறித்து அவர்களுக்குப் பகிர்ந்தார்.

சிறுவர்களுக்கு பெருமையாக இருந்தது. பலருக்கு விளக்கம் வேறு சொன்னார்கள். படிப்படியாக அவர்களோடு இன்னும் பலர் சேர்ந்து செயற்பட்டனர்.

"பொலிதீன், பிளாஸ்திக் என்பன பெருமளவு மக்களின் பாவனைக்கு வந்து விட்டன. தமது பாவனையின் பின் கண்டபடி எறிந்துவிடுகிறார்கள். இவை இற்றுப் போய் மண்ணோடு மண்ணாகச் சேர்வதில்லை. அதே நிலையில் இருந்து வருவதால் மண்ணை மாசுபடுத்துகிறது. மண்வளத்தைக் கெடுக்கின்றது. ஒவ்வொரு வீட்டிலும் சேரும் பொலிதீன் வகையறாக்களை எரித்துவிட வேண்டும். அப்படிச் செய்வது எமது சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகும்."

ஒலிப்பதிவு நாடாவில் பதிவுசெய்யப்பட்ட இந்த விளக்கவுரை அவ்வப்போது ஒலிபரப்பாகியது.

ஒரு நாள் பாடசாலைச் சுற்றாடலுக்குச் சென்ற இவர்கள் "இதெல்லாம் நாங்கள் எறிந்த ஐஸ்கிறீம் உரைகள் தான்" என்ற குற்ற உணர்வோடு எல்லாம் துப்புரவு செய்தார்கள்.

"பாடசாலையைப் போன்றே எமது வீடு, எமது கிராமம், எமது நாடு........ இவ்வாறாக எமது சூழல் பரந்துவிரிந்து செல்கிறது. இதனைப் பேணுவது ஒவ்வொருவரதும் கடமையாகும்."

இவ்வாறு ஆசிரியர் மேலும் விளக்கமளித்தார்.

அதன் விளைவாகவே இன்று இந்த இடத்துக்கு வந்தார்கள்.

ஒவ்வொருவரும் கழிவுச் சேகரிப்புக்களைக் கொண்டுவந்து குவித்த இடம் மலை போல் உயர்ந்துநின்றது. இனி இல்லை என்ற அளவுக்கு தேடிக் களைத்துவிட்டார்கள்.

"இதெல்லாம் பார்க்க வெட்கமாக இருக்கென்ன" குற்ற உணர்வோடு பொதுமக்கள் கதைத்துக் கொண்டனர்.

"சரி இதை எரித்து விடுவோம்" என்றான் இந்திரன்.

"ஆமாம்" என்றான் ஜயந்தன்.

"தீப்பெட்டியைக் கொஞ்சம் தருவீர்களா? " பக்கத்து வீட்டிலே போய்க் கேட்டான் இந்திரன்.

"நீங்கள் சின்னப் பிள்ளைகள். நானே கொளுத்திவிடுகிறேன்" என்றவாறு அந்த வீட்டு மனிதன் தீப்பெட்டியோடு வந்தார்.

கொழுந்துவிட்டெரிந்த தீ அவ்வளவையும் ஒரே நொடியில் சாம்பலாக்கியது.

மிகுந்த மகிழ்ச்சி அவர்களுக்கு.

எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு திரும்பி நடந்தார்கள்.

"நாங்கள் தயங்கித் தயங்கி ஐந்துபேர்தானே சென்றோம்" ஜெயந்தன் சொன்னான்.

"ஆமாம்"

"இருபது பேருக்கு மேல் வந்து சேர்ந்து விட்டார்கள் பார்த்தீர்களா..."

அவர்களுக்கு பெருமிதமாக இருந்தது. அடுத்த கட்டத்தை எங்கே மேற்கொள்வதென்று ஒவ்வொருவரும் தங்களுக்குள் சிந்தித்துக்கொண்டு சென்றார்கள்.

# பிறந்த நாள்

நிரஞ்சனின் பத்தாவது பிறந்த நாளுக்கு இன்னும் ஐந்தே நாட்கள் இருந்தன. பிறந்த நாளை எப்படிக் கொண்டாடுவதென்பதை இன்னும் அவன் தீர்மானிக்கவில்லை.

"இந்த முறை எனது பிறந்த நாளை வித்தியாசமாக கொண்டாட வேண்டும்". என்று நிரஞ்சன் சொல்லிவிட்டான்.

அம்மா, அப்பா, அக்கா எல்லோருக்குமே சந்தோசமாக இருந்தது, வியப்பாகவும் இருந்தது.

'இவன் எப்படிக் கொண்டாடப்போகிறான்'? என்பதே எல்லோர் மனதிலும் எழுந்த கேள்வி.

படுசுட்டியான நிரஞ்சன் 'கெட்டிக்காரன்' என்று பெயரெடுத்தவன். எதையும் புதுமையாகவும் பயனுள்ளதாகவும் செய்யவேண்டுமென்பதே அவனது நோக்கம்.

தனது சக நண்பர்களுக்கும் அழைப்பு விடுத்தான். அவனுக்கு உள்ளூரில் படிக்கும் நண்பர்கள், நகரப் பாடசாலையில் படிக்கும் நண்பர்கள் என்று பலர் இருந்தார்கள்.

அவனும் அவ்வப்போது பல நண்பர்களது பிறந்த நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதுண்டு.

சென்றவாரம் கணேசனின் பிறந்த நாள் விழாவுக்குப் போயிருந்தான். அவன் புத்தாடைகளால் பளபளத்தான். எல்லோரையும் வணக்கம் கூறி வரவேற்றான்.

முன்றலில் கதிரைகள் போடப்பட்டிருந்தன. மெல்லிசை ஒலித்துக்கொண்டிருந்தது. புகைப்படங்கள் எடுத்தார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

"எனது பிறந்த நாளுக்கும் அப்பாவிடம் சொல்லி இப்படியெல்லாம் செய்யவேண்டும்" என்று பக்கத்தில் நின்று சுந்தரம் காதுக்குள் சொன்னான்.

'எல்லா இடங்களிலும் ஒரே விதமாகத்தானே

செய்கிறார்கள். நான் ஏன் வித்தியாசமாக செய்யக்கூடாது'.

அந்த சந்தர்ப்பத்தில் இப்படியொரு சிந்தனை ஏற்பட்டுவிட்டது நிரஞ்சனுக்கு.

அது படிப்படியாக வளர்ந்தது. அவன் மதிக்கும் சிலரிடம் ஆலோசனை கேட்டான். அவன் எதிர்பார்த்தபடியே நல்ல ஆலோசனைகள் கிடைத்தன.

எல்லோருக்கும் அழைப்பு விடுத்தான். பெற்றார் இனிப்பு பண்டங்களுக்கு ஏற்பாடு செய்தனர்.

குறிப்பிட்ட நாளில் உறவினர்கள் வந்தார்கள். நண்பர்கள் ஒன்று கூடினார்கள். எதிர்பார்த்த ஒழுங்கு எவர் கண்ணிலும் படவில்லை.

"சரி நேரமாகிவிட்டது ஆரம்பிப்போம்". அவனது அப்பா சொன்னார்.

"எங்கே பிறந்த நாள் கேக்?" இப்படி யாரோ கேட்கும் குரல்.

"சரி வாருங்கள்" என்றவாறு நிரஞ்சன் வெளியிறங்கினான்.

அவன் பின்னால் எல்லோரும் சென்றனர். அனைவரது கண்களும் வியப்பால் விரிந்து நின்றன.

அவன் போய் நின்றதும் வட்ட அமைப்பில் அனைவரும் சூழ்ந்துகொண்டனர்.

ஒரு குழி வெட்டப்பட்டிருந்தது. அவனது கையிலே ஒரு சிறிய செடி காணப்பட்டது.



"எனது பத்தாவது பிறந்த நாள் நினைவாக நான் இந்த மரத்தை நடுகிறேன். ஒரு வருடம் தொடர்ந்து பராமரிப்பேன். இனி ஒவ்வொரு வருடமும் மரம் நடுகையே செய்வேன். மரங்கள் நமது வளங்கள். எமது சுற்றாடலைப் பாதுகாப்பவை. எமது வாழ்வுக்கு அவசியமானவை" இப்படி ஒரு குட்டிப் பிரசங்கத்தையே செய்தான்.

பின்னர் தன் கரங்களால் அதனை நட்டினான்.

எல்லோரும் அவனுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

அதைத் தொடர்ந்து சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. தேநீர் பரிமாறப்பட்டது.

சின்னப் பையனாக இருந்தபோதிலும் சிறந்த முன்மாதிரியைக் காட்டிவிட்டதாக பலரும் தங்களுக்குள் கதைத்துக்கொண்டனர்.

"இனிமேல் நாங்களும் இப்படியான முறையில்தான் கொண்டாடவேண்டும். கூடினோம் குதூகலித்தோம் என்பதோடு நிற்காமல் பிரயோசனமாக ஏதாவது செய்ய வேண்டும்".

அவனது நண்பர்கள் தங்களுக்குள் கதைத்து தீர்மானித்தார்கள்.

நிரஞ்சன் எதிர்பார்த்ததும் அதுதான். நண்பர்கள் மத்தியில் அவன் தலை நிமிர்ந்து நின்றான்.

# அடுத்தவன் பொருள்

*மாலை நேரம். வழமையோல் விளையாட்டு ஆரம்பமாகிவிட்டது. இனி இருள் படரும் வரை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.*

*ஆக நான்கு பேர்தான். சுகந்தனிடம் துடுப்பு இருந்ததே தவிர பந்து இருக்கவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவனிடமிருந்த இறப்பர் பந்து வெடித்துவிட்டது.*

*அந்தப் பகுதிச் சிறார்களுக்கு அவன்தான் தலைவன். எல்லோரும் அவனுக்கு கட்டுப்பட்டே நடந்து கொள்வார்கள். அவன் ஐந்தாம் தரத்தில் கல்வி கற்றான்.*

*விளையாட்டின்போது பிரச்சினைகள் ஏற்பட்டால் அவன் சொல்வதே தீர்ப்பாகி விடும்.*

*"ஆ...சரி சரி இலக்கம் பிடியுங்கள்."சுகந்தன் எல்லோரையும் அழைத்தான்.*

*ஒன்று முதல் நான்கு வரையிலான*

இலக்கங்களை இடம்மாற்றி நிலத்தில் எழுதினான். அதற்கு நேரே கோடிழுத்து துடுப்பினால் இலக்கங்களை மறைத்துக் கொண்டான்.

ஒவ்வொருவரும் தாம் விரும்பிய கோட்டில் கைவத்ததும் துடுப்பை உயர்த்தினான். விரல் காட்டும் இலக்க ஒழுங்கின்படியே ஆட்டம் நடக்கும். பின்னர் வந்து சேர்வோர் தொடர் ஒழுங்கின்படியே விளையாடுவார்கள்.

எப்படிப் பார்த்தாலும் பத்துக்கு மேற் பட்டோர் விளையாட்டில் சேர்ந்துகொள்ளமாட்டார்கள். அப்பகுதியில் ஆக நாலைந்து சிறிய வீடுகளே இருந்தன.

முதலில் நரேந்திரன் துடுப்பெடுத்து ஆடினான். உற்சாகமாக விளையாடியபோதும் மதினொரு ஓட்டங்கள் பெற்றதோடு ஆட்டமிழந்து விட்டான்.

இரண்டவதாக வந்த திலீபன் வெகு சாதுர்யமாக ஆடினான். தோற்றத்தில் குள்ளனாக இருந்தாலும் ஆட்டத்தில் மிகக் கெட்டித்தனமாக இருந்தான். அவனால் மின்னல் வேகத்தில் ஓடவும்

முடிந்தது.

அப்போதுதான் திடலுக்கு அதிசயன் வந்து சேர்ந்தான். எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

அவனது கையிலே மென்பந்து ஒன்று காணப்பட்டது. இளம் பச்சை, சிவப்பு இரட்டை நிறத்தில் அது கண்களைப் பறித்தது. எல்லோருமே தொட்டுத் தொட்டுப் பார்த்தார்கள்.

"எனக்கு மாமா கொண்டுவந்து தந்தார்" என்று பெருமையாக வேறு சொல்லிக்கொண்டான்.

புதிய பந்துக்கு ஓங்கிய சுஜீவனால் சரியாக அடித்துக் கொள்ள முடியவில்லை. துடுப்பில்பட்டு பின்பக்கமாகச் சுழன்று விக்கற்றில் மோதிவிட்டது.

"ஓஹோ"..என்று எல்லோரும் துள்ளிக் குதித்தார்கள்.

புதுப்பந்து தனது தகைமையை நிரூபித்துக் கொண்டது.

அடுத்து சுகந்தன் துடுப்பெடுத்தான்.

இரண்டொரு பந்து வீச்சை தடுத்துப் பார்த்தான். அடிவேகமாக இருக்க வேண்டும் போல் அவன் உணர்ந்தான். அதற்கேற்ப தன்னை நிதானப் படுத்திக் கொண்டான்.

படிப்படியாக அந்தி நகர்ந்து இருள் கவிந்து கொண்டு வந்தது.

'இந்தப் பந்தை நான் கைப்பற்றிக் கொண்டால் என்ன' சுகந்தனின் மனதில் இப்படியொரு ஆசை விழுந்துவிட்டது.

விளையாட்டு தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாலும் ஆசை விட்டபாடில்லை.

சற்று தூரத்தே காணப்பட்ட பற்றைக் காடு அவன் கண்களில் பட்டது. அடுத்த பந்தை ஓங்கி அடித்தான். அவன் எதிர்பார்த்த இடத்தில் அதுபோய் விழுந்தது.

அடுத்தவர்கள் எதிர்பார்க்கவோ அவதானிக்கவோ இல்லை.

பந்தை தேட ஆரம்பித்துவிட்டார்கள். இப்படி

அடிக்கடி பந்து காணாமல் போவதுண்டு. எல்லோரும் சேர்ந்து தேடி எடுப்பதும் வழக்கம்தான்.

இருள் இன்னும் கவிந்திருந்தது.

பற்றைக் காட்டுப் பக்கம் யாரும்



போகவில்லை. சுகந்தனுக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சி.

"இப்போது இருட்டிவிட்டது. காலையில் வந்து தேடுவோம்" திலீபன் அபிப்பிராயம் தெரிவித்தான்.

"இங்கே வேறு யாரும் வரப்போவதில்லையே"

சுஜீவன் அங்கீகரித்தான்.

அதிசயனால் பொறுக்க முடியவில்லை. முகமும் விடியவில்லை.

"பந்து கிடைக்காவிட்டால் எல்லோரும் சேர்ந்து வாங்கிக் கொடுப்போம். என்ன சரிதானே" சுகந்தனின் கூற்றை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

எல்லோரும் தத்தமது வீடுகளுக்கு சென்றனர்.

மீண்டும் சுகந்தன் மெல்ல மெல்ல பற்றைக் காட்டுப் பக்கமாக வந்தான். ஒரு முறை கண்ணெட்டும் தூரம்வரை அவதானித்தான். எவரையும் காணவில்லை. சில வீடுகளில் வெளிச்சம் தெரிந்தது.

பற்றைகளைக் கைகளால் விலக்கி விலக்கி முன்னேறினான். அவனது கண்கள் கூர்மையாகத் தேடின. கால்கள் முன்னேறின. அவனை மறைக்கக் கூடியளவுக்கு பற்றை. 'பந்து மாத்திரம் கிடைத்து விட்டால்....' கற்பனை சிறகு விரித்தது.

"ஐயோ அம்மா..."

வலி பொறுக்க முடியவில்லை. அவனை அறியாமலே கத்திக்கொண்டு வெளியே பாய்ந்தான். அடிப் பாதத்திலிருந்து இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது. உடைந்த போத்தல் ஓடு அவனது காலைப் பதம் பார்த்திருந்தது.

என்ன செய்வது....நொண்டி நொண்டி வீட்டுக்கு நடந்தான்.

அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்பட்டால் ஆபத்துதான் என்பது அவனுக்கு நன்கு புரிந்து விட்டது.

# நல்ல காரியம்

பாடசாலை விட்டாயிற்று. மாலாவும் சுசீலாவும் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தனர். பிரதான பாதையிலிருந்து திரும்பி ஒழுங்கைக்குள்ளால் நடந்துகொண்டிருந்தனர்.

"வல்வல்" என்று நாய்க்குட்டியொன்று குரைக்கும் சத்தம் கேட்டது.

சுசீலா நின்று சற்றுமுற்றும் பார்த்தாள்.

"என்ன?"..மாலா கேட்டாள்.

"நாய்க்குட்டியைக் காணவில்லையே" சுசீலா சொன்னாள்.

தொடர்ந்து குட்டிநாய் அவலமாகக் கத்திக் கொண்டிருந்தது.

"ஏதோ ஆபத்தில் மாட்டிக்கொண்டது போலிருக்கே" சுசீலா அனுதாபத்தோடு

சொன்னாள்.

"பாடசாலை விட்டால் நேரே வீட்டுக்குப் போகச் சொல்லி ஆசிரியர் சொல்லியிருக்கிறார். அம்மாவும் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்" மாலா சொன்னாள்.

"ஆபத்துக்கு உதவக்கூடாதென்று யாரும் சொல்லவில்லையே" சுசீலா துடுக்காகச் சொல்லிச் சிரித்தாள்.

"சரி வா பார்ப்போம்" மாலா தயாராகிவிட்டாள்.

இருவரும் மர அடிவாரங்கள், சிறிய பற்றைகள் எல்லாம் தேடிப் பார்த்தனர். ஓடியோடித் தேடினர். நாய்க்குட்டியின் சத்தம் அண்மையில் கேட்பது போலிருந்தது.

"சுசீலா ஓடிவா ஓடிவா" கண்டு பிடித்த மகிழ்ச்சியில் மாலா கத்தினாள்.

ஆளுயரக் குழியொன்றுக்குள் நாய்க்குட்டி நின்று கத்தியது. இவர்களைப் பார்த்து "என்னை

எப்படியாவது காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சியது.

எப்படி வெளியே கொண்டு வருவதென்று இருவருக்கும் விளங்கவில்லை. அதற்காக



முயற்சித்தால் தாங்களும் விழுந்துவிடுவோமே என்ற பயம் வேறு.

அப்போது சைக்கிளைத் தள்ளியபடி

ஒழுங்கையால் ஒருவர் வருவது தெரிந்தது. வேறென்ன செய்வது?

"அண்ணா ஓடி வாருங்கள் ஓடி வாருங்கள்" சுசீலா கத்தினாள்.

இவர்களுக்கு ஏதோ ஆபத்து என்று நினைத்த அவன் சைக்கிளை மரத்தடியில் வைத்து விட்டு ஓடி வந்தான்.

"என்ன? என்ன?" பதைத்தபடியே கேட்டான்.

"இந்த நாய்க்குட்டியை வெளியே எடுங்கள் அண்ணா" சுசீலா கெஞ்சிக் கேட்டாள்.

"இதுதானா நான் பயந்துபோய் விட்டேன்" என்றான்.

குழிக்குள் மெல்ல இறங்கி நாய்க்குட்டியை வெளியே தூக்கி வைத்தான்.

இருவரும் நன்றி தெரிவித்தனர்.

"சரி, இங்கே சுணங்க வேண்டாம். வீட்டுக்குப் போய் விடுங்கள்" என்று சொல்லி விடைபெற்றான்.

நாய்க்குட்டியை மாலாவும் சுசீலாவும் மாறி மாறித் தடவிக் கொடுத்தனர்.

குழியிலிருந்து வெகுதூரத்துக்கு கொண்டு வந்து விட நாய்க்குட்டி வாலை ஆட்டிக் கொண்டு ஓடியது.

இருவரும் வீட்டை நோக்கி நடந்தனர்.

"எனக்கு இன்றைக்கு நிம்மதியாகத் தூங்கலாம்" என்றாள் சுசீலா.

மாலா புரியாமல் அவள் முகத்தைப் பார்த்தாள்.

"தூங்கும் போது இன்றைக்கு என்ன நல்ல காரியம் செய்தேன் என்று யோசிப்பேன்" என்றாள் சுசீலா.

இப்பொழுது மாலாவுக்குப் புரிந்து விட்டது.

# நமது வளம்

கண்ணனும் பார்த்திபனும் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். இருவரும் அக்கம் பக்கத்தவர்களும் கூட.

வழமைபோல் அன்றும் அவர்கள் இருவரும் ஒன்றாகப் படித்துக்கொண்டிருந்தார்கள். கண்ணனின் வீடு அதற்குப் பொருத்தமாக அமைந்திருந்தது.

மாலன் கண்ணனின் அண்ணன். அவன் உயர் வகுப்பில் படிப்பவன்.

பார்த்திபனுக்கு அண்ணன், அக்காமார் எவரும் இல்லை. எனவே வீட்டில் அவனது கல்விக்கு உதவ எவரும் இருக்கவில்லை.

மாலன் இருவருக்கும் உதவி செய்வான். இவர்களது சந்தேகங்களைத் தீர்ப்பான். பிரச்சினைகளுக்கு விளக்கமளிப்பான். ஆலோசனைகளும் சொல்வான்.

மாலன் அன்று வீட்டுக்கு வரும்போது மாலையாகிவிட்டது.

"வணக்கம் அண்ணா" என்று இருவரும் அவனை வரவேற்றனர்.



அவனும் சிரித்தபடி பதில் வணக்கம் சொன்னான்.

கண்ணனும் பார்த்திபனும் தாங்கள் கேட்க

விருந்த கேள்விகளை தயார்படுத்திக் கொண்டனர்.

முகம் கழுவிக் கொண்டான் மாலன். தயாராக இருந்த தேநீரையும் பருகினான்.

அன்று மின்சாரம் சம்பந்தமாக விரிவாக அவன் படித்தான். ' மின்சாரம் ஒரு வளம். அதனைக் கவனமாக உபயோகிக்க வேண்டும். விணாக்கக்கூடாது'. இப்படியான மனப்பதிவு அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

வழமைபோல் வீட்டின் எல்லா அறைகளிலும் மின்விளக்குகள் ஒளிர்ந்தன. அவசியமில்லாமல் பல விளக்குகள் ஒளிர்வதை அவதானித்தான். அப்படிப்பட்ட நாலைந்து விளக்குகளை அணைத்தான்.

மாலனின் செயல் அவனது தம்பி கண்ணனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவன் மனதில் பல கேள்விகள் எழுந்தன. பார்த்திபனும் ஏதோ குசுகுசுத்தான். அவனுக்கும் வியப்பாகவே இருந்தது.

"அண்ணா ! ஏன் விளக்கெல்லாம்

அணைக்கிறீர்கள்?" கண்ணன் கேட்டான்.

"தேவையில்லாமல் இவை ஏன் ஒளிரவேண்டும்" மாலன் திருப்பிக் கேட்டான்.

"எல்லாம் ஒளிர்ந்தால்தானே அழகாக இருக்கும். நாங்கள் காசு கட்டுகிறோம் அல்லவா?" துடிப்போடு பதில் சொன்னான் கண்ணன்.

மாலன் மெல்லச் சிரித்தான்.

இந்தச் சிரிப்புக்குப் பின்னால் ஒரு விளக்கம் இருக்குமென்று அவர்களுக்குத் தெரியும்.

"மின்சாரத்தால்தானே விளக்கு எரிகிறது. மின்சாரம் எங்களுடைய ஒரு வளம். அழகுக்காக ஒரு வளத்தை வீணாக்கக்கூடாது. பணம் இருக்கிறது என்பதற்காகவும் வீணாக்கக் கூடாது. வளங்களை நாம் ஒவ்வொருவரும் பாதுகாக்க வேண்டும்" மாலன் சொன்னான்.

இருவரது உள்ளத்திலும் அந்த விளக்கம் மெல்ல ஊடுருவியது. அவர்களது சிந்தனையில் ஒரு அசைவை ஏற்படுத்தியது.

"கேட்க ஆசையாக இருக்கிறது. சொல்லுங்கள் அண்ணா" பார்த்திபன் ஆர்வமூட்டினான்.

"கடந்த காலங்களில் நாங்கள் இருட்டுக்குள் இருந்தது ஞாபகமிருக்கிறதா?" மாலன் கேட்டான்.

" ஏன் இல்லை. நீரேந்து பகுதிகளில் மழை பெய்யாததால் மின்சாரத்தைத் துண்டித்தார்கள்" கண்ணன் நினைவூட்டிச் சொன்னான்.

"மழை நீரைத் தேக்கிவைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் விசயம் உங்களுக்குத் தெரியும். எங்களுடைய மழைவீழ்ச்சி சீராக இல்லாததால் மின்சார உற்பத்தி வீழ்ச்சியடைகிறது. இதனால் எங்களது நாட்டின் உற்பத்தித் துறைக்கு பெரிய நட்டம் ஏற்படுகிறது. நாட்டுக்கு நட்டமென்றால் நமக்கும் நட்டந்தானே".

கண்ணனும் பார்த்திபனும் ஒருவரையொருவர் பார்த்து புன்னகை பூத்தனர். விளக்கம் கிட்டிவிட்டதென்பதை அது எடுத்துக் காட்டியது.

"கொஞ்சம் பொறுங்கள் நான் வீட்டுக்குப்

போய் வருகிறேன்" என்றான் இடை நடுவில் பார்த்திபன்.

"அப்படி என்ன அவசரம்?" கண்ணன் புரியாமல் தான் கேட்டான்.

"இல்லை. எங்கள் வீட்டிலும் இப்பொழுது வீணாக எத்தனையோ விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருக்கும்".

அவர அவசரமாகப் பதில் சொல்லிவிட்டு அவன் இறங்கி வீட்டுப் பக்கமாக ஓடினான்.

ISBN 955-95926-6-1